# TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION

**No. 19-A, Rukmini Lakshmipathy Road, (TIDCO Complex),**
**Egmore, Chennai 600 008**
Phone: ++91-44-28411376 / 28411378 / 28411379 Fax: ++91-44-2841137
**email: tnercmail@gmail.com** **Website: www.tnerc.gov.in**


எண் 8 / 2010
நாள் 12-04-2010

## செய்திக்குறிப்பு

**பொருள் : மின்கட்டணவீதம் மாற்றியமைத்தல்**

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் 1-4-2010 முதற்கொண்டு மின்கட்டண வீதத்தை ஏற்கெனவே நிர்ணயித்துள்ளது என்று ஒரு சில ஊடகங்களில் அறிக்கைகள் வெளியிடப்பட்டிருப்பது இந்த ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மின் கட்டண உயர்வு குறித்த கருத்துருக்கள் மீது எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்பதை இந்த ஆணையம் தெளிவுப்படுத்த விரும்புகிறது. ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டங்கள் முடிவடைந்த பின்பே அரசின் எரிசக்தித்துறை, நிதித்துறை ஆகிய துறைகளுடன் கலந்தாலோசித்த பிறகு இந்த ஆணையம் மின்கட்டண உயர்வு பற்றி முடிவு செய்யும். 2010ஆம் ஆண்டு மே அல்லது ஜூன் மாதத்தில் மின்கட்டண மாற்றியமைத்தல் பற்றிய முடிவானது எடுக்கப்படும். இந்த முடிவானது ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அமலுக்கு வரும்.

**(எம். வேலாயுதப்பெருமாள்)**
உதவிச் செயலாளர்